**தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை–06.**

**ந.க.எண்.020561/எம்/இ2/2021, நாள்: 14 .07.2021.**

பொருள்: பள்ளிக்கல்வி– 2021–2022 ஆம் கல்வியாண்டு – முன்னாள் தமிழக முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான ஜீலைத் திங்கள் 15 ஆம் நாளினை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தது – 15.07.2021 அன்று கல்வி வளர்ச்சி நாள் கொண்டாடுதல் சார்ந்து அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.169, பள்ளிக்கல்வி (என்) துறை, நாள்.06.07.2012.
2. அரசாணை (நிலை) எண்.123, பள்ளிக்கல்வி (பக5(1))துறை, நாள்.15.07.2013.

******

பார்வையில் காணும் அரசாணைக்கிணங்க, முன்னாள் தமிழக முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான ஜீலைத் திங்கள் 15 ஆம் நாள், கல்வி வளர்ச்சி நாளாக அரசால் அறிவிக்கப்பட்டு ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

தற்போது, கொரோனா வைரஸ் (Covid–19) தொற்றின் காரணமாக, பள்ளிகள் திறக்கப்படாத நிலையில், 15.07.2021 அன்று அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலகங்கள் / மாவட்டக்கல்வி அலுவலகங்கள் / வட்டாரக்கல்வி அலுவலகங்கள் மற்றும் அனைத்து பள்ளிகளிலும் கொரோனா பெருந்தொற்று குறித்து அரசு வெளியிட்டுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றி கல்வி வளர்ச்சி நாளினை கொண்டாடுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**பள்ளிக்கல்வி ஆணையருக்காக** 2/2

14/07/2021

பெறுநர்
அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள் /
அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் /
அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள்.

நகல்
அரசு முதன்மைச் செயலாளர்,
பள்ளிக்கல்வித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–09.